# பழந்தமிழர் திருமணம்

மயிலங்கூடலூர் பி. நடராசன்

2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழர் திருமணம்

மயிலங்கூடலூர் பி. நடராசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழர் திருமணம்

**மனவிருப்பம் :**

திருமணமென்பது ஆண், பெண் இருபாலாரையும் பலரறிய இல்லறத்தில் இணைத்து வைக்கும் சடங்கு ஆகும்.

'இங்ஙனம் இணைத்து வைக்கப்படும் தலைவன் தலைவியாகிய இருவரினதும் ஒன்றுபட்ட மனவிருப்பந்தான் திருமணத்திற்கு அமையக் கூடிய யாவற்றுக்கும் மேலான காரணமாக இருக்க வேண்டும்'

—குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றமும் வளர்ச்சியும்—

என்று பேரறிஞர் எங்கெல்சு கூறுகின்றார்.

இக்கோட்பாட்டுக்கு முரணாகப் 'பெற்றோரே திருமணத்திற்கு ஏற்பாடு செய்தனர். இரு தரப்பினரும் ஒப்பி வந்தனர். பண்டைக்காலத்தில் இந்த நிலையே அனைத்துலகிலும் நடைமுறையிலிருந்தது.' -மேலது

என அவர் ஆய்ந்து கூறுகின்றார். எனவே அவர் ஆராய்ந்த நாடுகளில் கருத்தொருமித்த காதலின் அடிப்படையாகத் திருமணம் நிகழ்வது அருமையாக இருந்ததென்பது பெறப்படுகின்றது.

**இறையனார் அகப் பொருள் :**

இலக்கியம் காலத்தின் கண்ணாடி. சங்ககால இலக்கியத்தைப் புதுநெறியில் ஆராய்ந்த பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை சங்க காலத்தை இயற்கை நெறிக்காலம் என்கிறார். சங்க காலத்தில் வாழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழர்களாற் போற்றி ஆதரிக்கப்பட்டு வந்தவை காதல் திருமணங்களே என்பது சங்க நூல்கள் வாயிலாக நாமறியும் செய்தியாகும்.

மனிதன் ஒரு விலங்கு. பாலியற் சேர்க்கை விலங்குகளின் இயல்பூக்கம் என்பது அறிவியல் முடிவு. யாருடைய தூண்டுதலும் துணையுமின்றி விலங்கு களிடையே காதலாடல் (Courting) நிகழ்வதை அறிவியல் ஆய்வுகள் ஐயத்திற்கிடமின்றி நிறுவுகின்றன. இந்த இயல்பூக்கமே உலகெங்கும் மனிதனிடமும் நிலவியிருக்கும் என்பது இயற்கைநெறி. இதனை இனங்கண்டு சங்ககாலப் புலவர்கள் இலக்கியமும் அக்கால அறிஞர்கள் இலக்கணமும் படைத்துள்ளனர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை இனங்கண்டு முன் மொழிந்த இக்கோட்பாட்டை இலக்கிய வரலாறாக்கி வெளியிட்ட பெருமை `தமிழிலக்கியத்தில் காலமும் கருத்தும்' என்ற நூலை வெளியிட்ட ஈழத்துப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களுக்கு உரியதாகும். சங்ககாலத்தின் பரந்து விரிந்த கண்ணோட்டத்தை இது ஓரளவிற்கு மட்டுப்படுத்தி விடுகின்றது என்ற போதிலும் காலத்தின் மிகச் சிறப்பான அடிப்படையை இக்கோட்பாடு முன்வைக்கின்றது என்பதில் ஐயமில்லை.

சங்க கால அகத்துறை இலக்கியங்களின்வழி எழுந்த இலக்கண நூல் இறையனார் அகப்பொருள்.

> 'கற்பென்று ஆன்றோரால் சிறப்பித்துக்
> கூறப்படுவது காதல் வழி வந்த
> கற்பே'

என்று இறையனார் அகப்பொருள் காதல் மணத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளது. இவற்றால் இன்று நனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகமுறை என்று சமூகவியல் அறிஞர்களாற் போற்றிப் புகழப்படுங் காதல் மணம். தமிழ் நாட்டிற் பழங்காலத்திலேயே மிகச் செல்வாக்குப் பெற்று விளங்கியதென்பது புலனாகும். அறிவியல் அடிப்படையில் அமைந்த இக்கருத்து பிரடெரிக் எங்கெல்சு என்ற மேதையின் ஆய்வில் இடம்பெறாமற் போனது வியப்புக்குரியதே.

'இருதரப்பினரும் இல்லாமையை அல்லது
பிரிவைப் பெரிய -- யாவற்றினும் பெரிய
என்றில்லாவிட்டாலும் -- துரதிட்டமென்று
கருதுகின்ற இடத்திலேதான் காதல் தீவிரமும்
நிரந்தரமும் பெற்று விளங்க முடியும்'

என்பது எங்கெல்சின் கருத்து ஆகும்.

பழந்தமிழரின் சங்ககால அகத்திணைப் பாடல்களிற் பெரும்பாலானவை காதலன் அல்லது காதலி மற்றவரின் பிரிவிற்காக வருந்தும் பாடல்களாகவே அமைந்துள்ளன. பிரிதல், இருத்தல் இரங்கல், ஊடல் என்னும் திணைக்குரிய பொருள்களின் பெயர்களே இவ்வியல்பை வெளிப்படுத்துகின்றன. குறிஞ்சித் திணைப் பாடல்கள் மட்டுமே சேர்ந்து மகிழ்ந்திருத்தல் என்னும் பொருளுடைய புணர்தலை உரிப்பொருளாகக் கொண்டன. ஏனைய நாற்றிணைப் பாடல்களும் ஏதோ ஒரு வகையில் பிரிவையே பாடுகின்றன. 'சோகச் சுவை நிறைந்த பாடல்களே இனியவை' என்ற ஆங்கிலப் புலவரின் கருத்துக்களுக்கு எடுத்துக்காட்டாக இந்த நாற்றிணைப் பாடல்களும் அமைந்துள்ளன. 'பிரிவதற்குரிய தண்டாக் காமமொடு மீண்டும் ஒன்றாகப் பிறப்பதற்காக ஒன்றாகவே இறக்க வேண்டும் என்று விரும்பும் காதல் நெஞ்சத்தைப் பழந்தமிழரிடமன்றி வேறெவரிடங் காணமுடியும்?' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழறிஞரின் கூற்று உண்மையே என்பதை எங்கெல்சின் கருத்து உறுதி செய்கின்றது.

இப்பிறப்பில் மட்டுமல்ல மறுபிறப்பிலும் இருவரும் பிரியக்கூடாது என்ற பெருவிருப்புச் சங்ககால மக்களிடையே நிலவியது.

*இம்மை மாறி மறுமை யாயினும்*
*நீயா கியரென் கணவனை*
*யானா கியருன் நெஞ்சு நேர் பவளே*

என்ற சங்கப் பாடல் இதற்குச் சான்றாகும்.

*நல்கான் நயவா னாயினும்*
*பல்காற் காண்டலும் உள்ளத்திற் கினிதே*

என்ற சங்கப் பாடல் பிரியாமற் சேர்ந்திருக்க விரும்பும் காதலின் உணர்வைப் புலப்படுத்துகின்றது. சாள்ஸ் டிக்கின்ஸ் என்ற ஆங்கில நாவலாசிரியரின் 'இருநகரக் கதைகளில்' (Tale of two cities, Charles Dickens) செல்வி மனெற் (Miss Manette) என்ற அழகி மாடியிலே நிற்கிறாள். வீதியிலே செல்லும் சிட்னி காட்டன் என்ற இளம் வழக்கறிஞன் குறுந்தொகைப் பாடலிலமைந்த இதே கருத்தை அவளைப் பார்க்கும் போதெல்லாம் நினைந்து நினைந்து உருகுகின்றான். பொறுத்தற்கரிய இப்பிரிவு உலகளாவியதென்பதற்கு இவை சான்றாகும்.

காதலே திருமணத்திற்குரிய எல்லாவற்றிலும் சிறந்த காரணமாகப் போற்றப்பட்டது. எனினும், மணமக்களின் பெற்றோரால் ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்களும் நடைபெற்றன. ஒரு அரச குடும்பத்தைச் சார்ந்த இளவரசன் இன்னொரு அரச குடும்பத்து இளவரசியை மணக்க விரும்பித் தூது அனுப்பித் திருமணத்திற்கு ஏற்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் முறையும் இருந்தது. இளவரசியின் தந்தை மறுக்கும்போது இரு அரசருக்குமிடையே போர் நடைபெறும். இளவரசன் போரிலே வென்றால் இளவரசியை மணப்பான். இது 'மகட்பாற் காஞ்சி' என்ற துறையாக இலக்கணத்திற் கூறப்படுகின்றது.

ஆயர்கள் என்ற இனக்குழு மக்களிடையே கொல்லேற்று மணங்களும் நிகழ்ந்தன. ஓர் ஆயமகளை மணக்க விரும்பும் ஆடவர்களுள் அவளுடன் வளர்ந்துவரும் முரட்டுத்தனமுடைய கொல் ஏற்றினை வென்று அடக்கும் ஆடவனை அவள் மணப்பாள். அல்லாதவனை மறுமையிற் கூடச் சேரமாட்டாள்.

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்

என்பது கலித்தொகைப் பாடல். வீரம் விளைத்துப் பெண்ணை மணக்கும் முறையும் உலகளாவிய மரபாகும். பஞ்சபாண்டவருள் 'வில்லுக்கு விசயன்' என்று புகழ் பெற்ற அருச்சுனன் நீர்த்தடாகத்தின் நடுவே தூணின் உச்சியிற் சுழலும் பறவையை நீருட் பார்த்தபடி எய்து வீழ்த்திப் பாஞ்சாலியை மணந்தான் என்பது பாரத இலக்கியம் தரும் செய்தி. தசரத குமாரனாகிய இராமன் வில்லை வளைத்துச் சீதையை மணந்தான் என்பது ஆதிகாவியமாகிய வால்மீகியின் இராமாயணம் கூறும் வீரமண முறை. 'எடுத்தது கண்டார், இற்றது கேட்டார்' என்று இராமனின் வீரசாதனையைக் கம்பர் பாடுகின்றார்.

இன்றுபோல் பழந்தமிழகத்திலும் பெற்றோர் மணமகனையோ மணமகளையோ தெரிந்து மணஞ் செய்து வைக்கும் வழக்கம் சங்ககாலத்திலிருந்ததென்பது குறுந்தொகை, புறநானூறு முதலிய நூல்களிலிருந்து தெரிய வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...............தந்தை
இரும்பனை யன்ன பெருங்கை யானை
கரந்தையஞ் செறுவிற் பெயர்க்கும்
பெருந்தகை மன்னற்கு வரைந்திருந் தனனே

என்ற புறப்பாடலில் (340) மன்னனொருவன் கரந்தைப் போரில் யானையை வெல்லும் வீரம் வாய்ந்த இளவலொருவனுக்குத் தன் மகளை மணஞ்செய்ய முடிவு செய்திருந்தமை கூறப்படுகின்றது.

மணமகளின் பெற்றோரேயன்றி மணமகளின் தமரும் மணம்பேசி வருதல் உண்டு என்ற செய்தி குறுந்தொகையிற் கூறப்பட்டுள்ளது. 'தலைவன் என்றும் குறையாத அன்புடையவனாக இருக்கின்றான். புதியோரும் மணம்பேசி வருகின்றனரே' என்று ஒரு தலைவி 'களவு' நிலையில் வியக்கின்றாள். இச்செய்தியை வெளிப்படுத்தும் பாடல் வருமாறு:

..........கிழவோன் என்றும்
அன்றை யன்ன நட்பினன்
புதுவோர்த் தம்மலவ் வழுங்க லூரே

குறுந்தொகை-04

தலைவி ஒருவனைக் கண்டாள். அவனும் அவளைக் கண்டான். இருவரும் 'மாறிப்புக்கு இதயம் எய்தினர்'. கண்ட அன்று உருவான நட்பு நிலைத்தது. களவு கற்பாக மாறவில்லை. ஆனால் ஊரார் அவர்கள் காதலை அறியவில்லை. எனவே, மணம்பேசி வருகின்றனர். இதனைக் கண்டு அவளுள்ளத்தில் வியப்பும் நகைப்பும் ஏற்படுகின்றன. அதுவே மேற்படி பாடலாக, தலைவி கூற்றாக உருவாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே கூறப்பட்ட மணமுறைகளுள் சிறந்ததாகவும், இயற்கையானதாகவும் உள்ளது காதல் மணமே. அதுவே தமிழகத்திற் பெருவழக்காக இருந்தது போலும்.

ஆரியர்களிடையே பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் ஆகிய எண்வகை மணங்கள் நிலவின. இந்த மணங்களோடு தமிழகத்துக் காதல் மணத்தை ஒப்பியன் முறையில் ஆய்ந்து அது காந்தருவத்தை ஒத்தது எனத் தொல்காப்பியர் இனங்கண்டு கூறுகின்றார்.

> *இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
> *அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்*
> *காமக் கூட்டம் காணுங் காலை*
> *மறையோர் தேத்து மன்றல் எட்டனுள்*
> *துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே*
>
> தொல் பொருள் களவியல்-89

என்பது அவரது ஒப்பியற் கருத்து 'காந்தருவமாவது ஒத்த இருவர் தாமே கூடுங் கூட்டம்' என இளம்பூரணர் காந்தருவ மணத்திற்கு வரைவிலக்கணம் தருகின்றார்.

ஒத்த இருவரிடையே காதலேற்படக் காரணமாயமைவது விதியென்பது பழந்தமிழ்ச் சான்றோர் நம்பிக்கை. 'நல்லை மன்றம்ம பாலே' என்று விதியின் செயலை வியக்கின்றார். தொல்காப்பியரும் இதே கருத்தினை எடுத்துரைக்கின்றார்.

> *ஒன்றே வேறே என்றிரு பால்வயின்*
> *ஒன்றி உயர்ந்த பால தாணையின்*
> *ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப*
> *மிக்கோ னாயினும் கடிவரை யின்றே*
>
> தொல்.பொருள் கள-90

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒன்றி உயர்ந்த பால தாணையின்'. என்ற தொல்காப்பியர் கூற்றுக்கு, 'இருவருள்ளமும் பிறப்புத் தோறும் ஒன்றி நல்வினைக் கண்ணே நிகழ்ந்த ஊழினது ஆணையின்' என இளம்பூரணர் விளக்கம் தருகின்றார். 'காம நிகழ்ச்சியின் கண் ஒத்த அன்பினராய்க் கூடுதல் நல்வினையான் அல்லது வாரா' தென்பது அவர் மேலும் தரும் விளக்கம்(கழகப் பதிப்பு ப.161). இதனை உணர்ந்ததனாற் போலும், பெற்றோர் களவொழுக்கத்தில் ஈடுபட்ட காதலரின் வாழ்க்கையிற் குறுக்கிடாது அவர்களை ஒன்றுபடுத்தி வைத்தனர்.

எதிர்பாராமல் ஒருவரையொருவர் தனிமையிற் கண்டு காதல் கொண்ட இருவர் பெற்றோரும் மற்றோரு மறியாமல் தம் காதலை வளர்த்து வருவர். தோழி இருவரையுங் கூட்டியுஞ் சேட்படுத்தியும் அன்பை மிகுவித்து வேலிபோல் நின்று துணைசெய்து காப்பாள். இங்ஙனம் எவருமறியாமல் வளருங் காதலே 'களவு' எனப்படும்.

காதலர் இருவரும் களவிலே கூடுவதிலே தொல்லைகளேற்படும். அத்தொல்லைகளைத் தாங்க முடியாது தலைவி வருந்த நேரும். அப்போது 'தந்தையும் தாயும் உணரக் காட்டி ஒளித்த செய்தி வெளிப்படக் கிளத்தல்' ஆகிய 'அறத்தொடுநிற்றல்' நிகழும். அதன்பின் 'மலைகெழு வெற்பன் தலைவந்து இரப்ப' தலைவியின் பெற்றோர் திருமணத்திற்கு உடன்படுவர். தலைவன் தலைவியை மணம்புரிந்து வாழும் இல்வாழ்க்கை 'கற்பு' எனப்படும்.

'அறத்தொடு நிலை இல்லாதபோதும் தலைவன புதியோன் போல் வந்து 'தொன்றியன் மரபின் மன்றலயரப் பெண்கோள் ஒழுக்கம்' நிகழ்த்துவதுமுண்டு. களவிற் கூடி இன்பம் பெறுவதாற் பழி ஏற்படும் என்று உணர்ந்த தோழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்புறுத்தத் தலைவன் பெண்கோள் ஒழுக்கம் தலைக் கொள்வான். எல்லா வகையிலும் பழங்காலம் முதல் ஊரும் உலகமுமறிய மரபுமுறையில் நிகழும் மணவிழாவே களவின் முடிவாகவும் கற்பின் தொடக்கமாகவும் அமையும் என்பதைத் 'தொன்றியல் மரபின் மன்றல்' என்ற தொடர் உறுதி செய்கின்றது.

**சீதனமுறை**

இன்று நிகழ்வதுபோல் பழந்தமிழகத்திற் பெண்ணோடு சேர்த்துச் சீதனம் (ஸ்திரீதனம், ஸ்ரீதனம்) கொடுக்கும் கொடிய வழக்கம் இருந்ததில்லை. இதற்கு மாறாக ஆடவனே, 'பாசிழை விலை,' 'சிறுவளை விலை', 'முலை விலை' 'பரிசம்' என்ற பெயரால் இல்லறம் நடத்துவதற்கு வேண்டிய செல்வத்தை ஈட்டித் தருவான். மணத்தின் பின் இல்வாழ்க்கை நடத்தும் ஆடவன் தனது வினைவலியாற் பெற்ற செல்வத்திலேயே இல்வாழ்க்கை நடத்த வேண்டுமென்பது பழந்தமிழர் கொள்கை.

> ....... தண்துறை யூரன்
>
> சிறுவளை விலையெனப் பெருந்தேர் பண்ணியெம் முன்கடை
> நிறீஇச்..........

சென்ற செய்தி நற்றிணையிற் கூறப்படுகின்றது. 'சிறிய வளைக்கு விலையாகப் பெரிய தேர் செய்வித்து வழங்குதல்' என்ற தொடரிலே அமைந்த முரண் அணி ஆடவனின் கடமையையும் பொறுப்பையும் உணர்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல் :**

திருமணத்திற்குப் பின் கல்வி, தூது, போர் முதலிய பல்வேறு காரணங்களுக்காகத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிவான். ஆனால், திருமணம் உறுதி செய்யப்பட்டதும் திருமணத்தின் முன் தலைவன் பொருள் தேடும் நோக்குடன் தலைவியை விட்டுப் பிரிவான். இப்பிரிவு 'வரைவு இடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல்' எனப்படும். மன்றல், வரைவு, வதுவை என்ற சொற்கள் மணம் என்பதைக் குறிக்க வழங்கப்பட்டன.

இல்வாழ்க்கையின் நிறைவுக்குச் செல்வமே அடிப்படை. ஆனால் செல்வத்தைவிட அன்பே பெறுமதி வாய்ந்ததாகக் கருதப்பட்டது. யாரும் அறியாமல் முன்பே தலைவியின் அன்பைப் பெற்றுவிட்ட தலைவன் திருமணத்தின் முன்னோடியாகத் தலைவியின் குடும்பத்தினரின் அன்பைப் பெறுவது இன்றியமையாததாக இருந்தது. இதனைத் தோழி தலைவனுக்கு உணர்த்து கின்றாள். அன்பு, ஒப்பான குலம் என்பவற்றையே பெண்ணின் சுற்றத்தார் பெரிதும் விரும்பினர்.

'கோசருடைய செல்வம் போன்ற பெருஞ்செல்வம் கொடுத்தாலும் அவளின் தமர் பாசிழை விலையாக ஏற்றுக் கொள்ளார். எனவே விரைந்து வந்து அன்பைப் பெறுவாயாக' என அகநானூற்றுப் பாடல் ஒன்றில் அன்பே பெரிதாக மதிக்கப்பட்டமை கூறப்பட்டுள்ளது.

'பெரும் பொருளைப் பணிவோடு கொடுத்தாலும் ஒப்பில்லாதவரை இவள் மணம் புரியாள்' என்னும் பொருளுடைய புறநானூற்றுப் பாட்டில் ஒப்பான குலமே பெரிதாக மதிக்கப்பட்டமை கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொன்றியல் மரபின் மன்றல் :**

தமிழருக்கே சிறப்பாக உரியதான மணச் சடங்கொன்று சங்க காலத்தில் இருந்ததென்பது அகநானூற்றிலுள்ள இரு பாடல்களால் தெரியவருகின்றது. வேறு பாடல்களிலும் மணத்தின்போது நடக்குஞ் சில நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. இம்மணச் சடங்கு 'தொன்றியல் மரபின் மன்றல்' என்று அகநானூறு கூறுவதிலிருந்தே இம்மரபு சங்க காலத்திலும் பழமையானது என்பது புலனாகின்றது.

இம்மணவினையிற் சிலப்பதிகாரத்திற் கூறப்படுவது போன்று

*'மாமுது பார்ப்பான் மறைவழி காட்டலோ'*
*'தீவலம் செய்தலோ'*
*'மங்கல நாண் புனைதலோ'*
*'அம்மி மிதித்து அருந்ததி காட்டலோ'*

கூறப்படவில்லை.

மணமகளை நீராட்டிப் புத்தாடை அணிந்து 'சிறந்த இல்லக் கிழத்தியாக வாழ்க' என மணமகனிடம் ஒப்படைத்தல் மட்டுமே நிகழ்ந்தது.

**மணநாள் :**

வேங்கை மலருங் காலத்திலேயே பழந்தமிழர் திருமணம் நிகழ்ந்ததாகப் பல பாடல்களிற் சுட்டப்படு கின்றது. வேங்கை மலருங் காலத்தில் தீய கோள்களின் தொடர்பு நீங்கிய சந்திரனை உரோகிணி நாள் வந்தடைந்த நல்லவேளையிலே திருமணம் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக்கிருந்த இருளும் நீங்கி எங்கும் அழகு மலரும் புலர்காலை வேளையில் மணம் நிகழ்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

வேங்கையு மொள்ளிணர் விரிந்தன
நெடுவெண் திங்களு மூர்கொண் டன்றே

என்ற அகப்பாட்டில் அச்செய்திகள் ஒருங்கே உணர்த்தப்பட்டுள்ளன.

**மணப்பந்தல் :**

திருமணத்திற்கு முன் வரிசையாகிய 'கால்'களை (கப்பு-தூண்)இட்டுப் பெரிய பந்தர்களை அமைத்தனர். மணலைப் பரப்பினர்; மலர் மாலைகளைத் தொங்க விட்டனர்; நறுமணப் பொருள்களாற் புதுமணங்கமழச் செய்தனர். அப்பந்தலிலே மணவிளக்குகளை வரிசையாக ஏற்றி வைத்தனர்.

**மணவிழா நிகழ்வுகள் :**

மணநாளன்று கடவுளைப் பரவும் நிகழ்ச்சி முதலிடம் பெற்றது. மணநாளில் மணமுரசும் மணமுழவும் ஒலிக்கப்பெற்றன. மணவிழாவிற்கு வருவோர்க்கெல்லாம் விருந்து கொடுக்கப்பட்டது. உழுத்தம் பருப்புப் பொங்கலோ, இறைச்சியுடன் கூட்டிச் சமைத்த நெய்மிகுந்த வெண்சோறோ விழாவிற்கு வந்த அனைவருக்கும் வழங்கப்பட்டது. மணமக்களுக்கு விருந்தினர் பரிசுவழங்கும் இன்றைய வழக்கத்திற்கு மாறாக அன்று விருந்தினர்க்கெல்லாம் நீர்வார்த்துப் பரிசில் வழங்கும் வழக்கமே நடைமுறையில் இருந்தது. இவ்வுண்மை பின்வரும் பாடலிற் சுட்டப்படுகின்றது:

வதுவை விழவின் புதுவோர்க்கெல்லாம்
வெவ்வாய்ப் பெய்த பூத நீர் சால்கென

புறம்-372

சடங்கு :

பழந்தமிழர் திருமணங்கள் ஊர்ப் பொதுவிழாக்களாகவே நடைபெற்றன. வாழ்வரசியராக இருக்கும் முதுபெண்டிரே திருமணத்தை முன்னின்று நடத்தினர்.

முதுபெண்டிர் வாகை இலையோடு அறுகும் பாவை போன்ற குரா மரத்துப் பூவுஞ் சேர்த்துக் கட்டப்பட்ட வெண்ணூலை மணமக்களுக்குக் காப்பாகக் கட்டினர். பின் அவர்கள் அலரி மலரும் நெல்லுமிடப்பட்ட நீர் நிறை குடங்களை ஏந்தி வந்து தர வாழ்வரசியராகிய பெண்கள் நால்வர் கூடி மணமகளை நீராட்டினர். நீராட்டும்போது 'கற்பு நெறியினின்றும் வழுவாமல் நல்ல பல பேறுகளைத் தந்து கணவனை விரும்பிப் பேணும் விருப்பத்தையுடைய வளாகுக' என்று வாழ்த்தினர்.

மணமகளுக்குக் கோடிக் கலிங்கம் புனைந்து பல்வேறு நகைகளை அணிந்தனர். இவ்வணி 'வதுவை நாளணி' என்று சிறப்பித்துக் கூறப்படுகின்றது.

பின்னர் மணமகளை மணப்பந்தலுக்கு அழைத்துவந்து அமர்த்தினர். சுற்றத்தினர் கூடிப் 'பெருமைக்குரிய இல்லக்கிழத்தி ஆவாய்' என்று வாழ்த்தி அவள் முன்கை பற்றி நாடறியத் தலைவனிடம் கொடுப்பர். இதுவே மணவினையின் சிறப்பு நிகழ்சியாக இடம் பெற்றது. 'நேரியமுன்கை பற்றி நுமர்தர நாடறி நன்மணம் அயர்கம்' (குறிஞ்சி 231-232) என்பது காண்க. இதுவே, வதுவை நன்மணம் எனப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிலம்பு கழீஇ அயர்தல் :**

சிலப்பதிகாரத்தில் மலைபோன்ற செல்வம அனைத்தையும் இழந்து வறுமையுற்ற நிலையில் கோவலன் மாதவியோடு மனமுறிவுற்றுக் கண்ணகியிடம் வருகின்றான். அப்போது அவள் 'சிலம்புள கொள்ளும்' என்று தன் காலிலிருந்த சிலம்பைக் கழற்றிக் கோவலனிடம் கொடுக்கின்றாள். அதுவே கோவலனுக்குக் காலன் ஆனது. இதனால் சங்கம் மருவிய காலத்தில் திருமணமான பெண்கள் சிலம்பணியும் வழக்கமிருந்ததென்பது வெளிப்படை. ஆனால், சங்க காலத்திலே பெண்கள் குழந்தைப் பருவத்திலேதான் சிலம்பணிந்திருந்தனர்.

முத்தரிப் பொற்சிலம் பொலிப்பத் தத்துற்(ற) ஏவல் மறுக்கும்
சிறுவிளையாட்டி நற்-110

தன் காதலனோடு உடன் போக்கில் ஈடுபட்டாள் தலைவியொருத்தி. அவளுடைய காலிற் சிலம்பு கிடந்து புலம்பியது. தலைவனுடைய காலிலிருந்து கழல் ஒலித்தது. சிலம்புங் கழலுமே அவர்கள் மணமாகாது உடன் போக்கில் ஈடுபட்டுள்ளனர் என்பதை வழிப் போக்கருக்கு உணர்த்தின. எனவே பெண் திருமணத்தின் பின் சிலம்பு அணிவதில்லை என்பது புலனாகின்றது.

'வேலோன் காலன கழலே தொடியோள் சீறடி மேலவுஞ்
சிலம்பே ..........' குறுந் - 149

**தாலி கட்டும் பழக்கம் :**

இன்றைய திருமணத்தில் தாலியணிவதே இன்றியமையாச் சடங்காக உள்ளது. 'கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்ததுபோல' என்ற பழமொழி தாலியின் இன்றியமையாமையை உணர்த்துகின்றது. மாங்கலிய மணியாதவள் கன்னியாகவோ, கைம் பெண்ணாகவோ கணிக்கப்படுகின்றாள். பழந்தமிழகத்தில் இவ்வழக்கம் இருந்தமைக்கு உறுதியான சான்று எதுவுங் கிடையாது.

பழந்தமிழகத்திற் பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் பிள்ளைப் பருவத்தில் தாலியணிந்தனர். அரைஞாண் கயிற்றில் இன்றும் ஐம்படைத்தாலியணியும் வழக்கம் உள்ளது.

*புலிப்பல் கோத்த புலம்புமணித் தாலி*

என்ற அகநூனூற்று(07)ப் பாடலடியில் சிறுமியொருத்தி தாலியணிந்த செய்தி பேசப்படுகின்றது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் 'தாலி களைந்தன்று மிலன்' ஆகப் போருக்குச் சென்ற செய்தியைப் புறநானூற்றுப் பாடலொன்று எடுத்துரைக் கின்றது.

*புலிப்பற் றாலிப் புன்தலைச் சிறாஅர்*

எனவும் புறப் பாடலொன்று சிறுவர் தாலி அணிந்தமை பற்றிக் கூறுகின்றது.

எனவே, தாலி, பழந்தமிழரணிந்த அணி என்பது உறுதியாகத்தெரிகின்றது. அதனைத் திருமணத்தின்போதும் அணியும் வழக்கம் இருந்ததெனில் திருமணம் பற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படும் பாடல்களில் அது தவறாமல் இடம்பெற்றிருக்கும். ஆனால் அவ்வாறு கூறப்பட்டதற்குச் சான்று கிடைக்கவில்லை.

'ஈகையரிய இழையணி', 'பின்னமை நெடுவீழ்' என்பன தாலியையே சுட்டுவதாக அறிஞர் பலர் கூறுகின்றனர்.

**உடன்போக்கு மணம் :**

இதுவரை மணமகளின் பெற்றோருடைய உடன்பாட்டோடு தலைவியின் மனையில் நிகழந்த திருமணம் பற்றிக் கண்டோம். இனிப் பெற்றோரின் உடன்பாடு கிடைக்காத போது தலைவனும் தலைவியுமாகிய காதலர் மேற்கொள்ளும் 'உடன் போக்குப்' பற்றிச் சிறிது ஆராய்வோம்.

தலைவனும் தலைவியும் புணர்ந்துடன் போகும் பொழுது தலைவியின் உயிர்த்தோழியே அவர்கள் இருவரையும் சேர்த்து உடன்போக்கில் ஈடுபடுத்தி வைக்கின்றாள். அப்போது அவள் தலைவியைத் தலைவனிடம் 'கையடை' கொடுத்துத் தலைவனுக்கு அறிவுரை-அறவுரை கூறுகின்றாள். இவ்வறவுரைகள் நெஞ்சத்தைத் தொடுவனவாக அமைந்துள்ளமையைப் பழந்தமிழ் இலக்கியங்களிலே பரக்கக் காண்கின்றோம். அத்தகைய உணர்ச்சிப் பிழம்பாக விளங்கும் பாடலொன்றை நற்றிணையிலே(10) காண்கின்றோம்.

அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியின் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்த லோம்புமதி பூக்கே ளூர
................................ தின்
பிழையா நன்மொழி தேறிய இவட்கே'

வாழ்நாள் முழுவதும் தலைவியைப் பிரியாது கண்ணை இமை காப்பது போல என்றென்றும் காக்க வேண்டும் என்பதைத் தோழி எத்துணைச் சிறப்பாகக் கூறிவிடுகிறாள்.

புணர்ந்துடன் போய இருவரும் தமர் மனை எதற்குஞ் சென்றுவிடாது தடுக்கும் வகையில் செய்தி அறிந்த உடனேயே அவர்களைத் தேடிச் சென்று அருஞ்சுரங் கடந்து இடைச்சுரத்தில் சந்தித்து, மீட்டு வந்து மணமகளின் இல்லத்திலேயே திருமணம் நிகழ்த்தி வைக்கும் வழக்கமும் சங்ககாலத்தில் இருந்தது என்பதைச் சில பாடல்கள் மூலம் அறிய முடிகின்றது.

அவ்வாறு தலைவியின் உறவினர் இடைச்சுரத்தில் வந்து அவர்களை மீள அழைத்துச் செல்லாவிடில் அவர்கள் தலைவன் வீட்டிற்கே செல்வர். அவ்வாறு செல்லும்போது தலைவன் வீட்டில் தலைவியின் சிலம்பை அகற்றி ஊரார் முன் இருவரையும் இல்வாழ்வில் ஈடுபடுத்தும் சடங்கு நடைபெறும். இது 'சிலம்பு கழீஇ(விழா) அயர்தல்' என வழங்கப் பெற்றது. இவ்வாறு திருமணம் நிகழினும் பின் தலைவியின் பெற்றோரின் உடன்பாடுபெற்று, அவள் வீட்டிற்கு மீண்டுவந்து 'வதுவை நன்மணம்' நிகழ்வதும் உண்டு.

ஐங்குறு நூற்றின் பாலைத் திணைப்பாடலொன்றில் (ஐங்.பாலை.மறுதரவுப் பத்து 399:9) இச்செய்தி 'சம்பந்தி சண்டை' என்ற இன்றைய பிராமணிய வழக்கை ஒத்தமுறையில் (வாஷிங்டனில் திருமணம், சாவி) கூறப்பட்டுள்ளது.

*நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும்*
*எம்மனை வதுவை நன்மணங் கழிகெனச்*
*சொல்லின் எவனோ மற்றே வெல்வேல்*
*மையற விளங்கிய கழலடிப்*
*பொய்வல் காளையை ஈன்ற தாய்க்கே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலுக்கான பழையவுரை (யாழ் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், தி.சதாசிவஐயர் பதிப்பு 1943)

> உடன் கொண்டு போன தலைமகன் மீண்டு தலைவியைத் தன்னில்லத்துக்குக் கொண்டு புக்குழி அவன்றாய் அவட்குச் சிலம்பு கழி நோன்பு செய்கின்றாளெனக் கேட்ட நற்றாய் ஆண்டு நின்றும் வந்தார்க்குச் சொல்லியது'

எனச் 'சிலம்பு கழீஇ அயர்தல்' விழாவை விளக்குகின்றது.

'பொய்யல்ல காளையைப் பெற்ற தாய் தன்னுடைய வீட்டிலே சிலம்பைக் கழித்து ஒழித்து ஒழிந்த கலியாணஞ் செய்யினும் என்னுடைய மனையிலே செய்யும் வதுவையாகிய நல்ல கலியாணம் செய்க என்று சொன்னால் என்ன கெட்டுவிடும்?' என்று சீற்றத்தோடு கேட்கின்றாள். இந்த மறுமணத்தை இன்று நிகழும் 'நாலாஞ் சடங்கு' நிகழ்ச்சியுடன் ஒப்பிட்டுக் காணலாம் போலும்.

**பரத்தையர் தொடர்பு :**

சங்கத் தமிழகத்திலே ஒருவனுக்கு ஒருத்தி என்ற அறவாழ்வே காணப்பட்டது. இருபினும் ஆடவர் பரத்தையர் பாற் சென்று அவருடைய 'ஒல்லா முயக்கில்' மகிழ்வதும் உண்டு. தமிழ்ச் சான்றோர் இவ்வழக்கினை அறனெனக் கொண்டாரல்லர்.

பழந்தமிழ்ச் சோழ வேந்தனாகிய நலங்கிள்ளி வஞ்சினங் கூறும்போது 'யான் போரிலே புறங்கண்டாற் பரத்தையருடன் சேருந்துன்பம் பெறுவேனாக' என்று மொழிவதனைப் புறநானூற்றிலே கேட்கலாம். நற்றிணை, மதுரைக் காஞ்சி முதலிய நூல்களிலும் பொதுமகளிர் இயல்பும் தொடர்பும் இழித்துக் கூறப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கணவன் இறந்தால் .........? :**

இன்று கணவன் இறந்தபின் அல்லது மனைவி இறந்தபின் மறுமணஞ் செய்துகொண்டு வாழ்வதனைப் பெரும்பாலும் காண்கிறோம். ஆனால் பழங்காலத்தில் இவ்வழக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

கணவன் இறந்தபின் அவனை எரிக்கும் தீயில் வீழ்ந்திறக்கும் செயலை விரும்பிச் செய்தமையைப் புறநானூற்றிலே காண்கின்றோம். 'கோப்பெரும் பெண்டு' என்ற அரசி தன் கணவன் இறந்தபோது அவன் உடலை எரிக்கக் குயவன் தாழியை வனையும் போது தானும் சேர்ந்து வீழ்ந்து எரிய, 'அகலிதாக வனைக' என்று ஆணையிடுகின்றாள். 'தாமரை நள்ளிரும் பொய்கையும் தீயுமோ ரற்றே' என்று கூறி அவனுடன் வீழந்து தன் உடலை எரித்துக் கொள்கின்றாள். பெரும்பாலான பெண்கள் தம் தலைமயிரையும் அணிகலன்களையும் களைந்து கைம்மை நோன்பு நோற்றனர். கரடுமுரடான தரையிலே பாயின்றிப் படுத்தனர். நீர்ச் சோற்றைப் புளி கூட்டிச் சமைத்த வேளைக் கீரையுடன் உண்டனர். மயானத்திலே நிலத்தை மெழுகி இறந்த கணவனுக்காக உணவு படைத்து வழிபட்டனர். சுருங்கக் கூறின், அவர்கள் இன்ப நுகர்ச்சியை வெறுத்துச் சமுதாய விழாக்க்ளிலோ பிற நிகழ்வுகளிலோ கலந்து கொள்ளாமற் கணவனை நினைந்து நோற்றனர். மனைவியை இழந்த கணவரும் தபுதார நிலையை ஏற்று நோற்றனர் என்று புறநானூற்றின் மூலம் அறிய முடிகின்றது.

*இம்மை மாறி மறுமை யாயினும்*
*நீயா கியரென் கணவனை*
*யானா கியர்நின் நெஞ்சுநேர் பவளே*

என்ற குறுந்தொகைப் பாடல் (49) தலைவன் தலைவியரின் அன்பு நிலையைத் தெளிவுபடுத்துகின்றது.

நன்றி : தினகரன் புத்தாண்டு மலர் 14.04.1966 பக் - 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org